ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௯. ஆங்கீரஸ௵ ஆடி, ஆவணி பகுதி ௭, ௮.

Vol. 9. July & August, August & September 1932. **No. 7, 8.**

வேண்டுகோள்.

நமது திவாகரம், எம்பெருமானுடைய கடாக்ஷ விசேஷத்தாலும், பெரியோர்களுடைய அநுக்ரகத்தாலும் பல்லாண்டுகளாகச் செவ்வனே நடைபெற்று வருகின்றதை யாவருமறிவர். ஸத்வ குணம் அதிகரித்த அக்காலத்திற் பெரும்பாலரும் பாரமார்த்திகத்தைத் தெரிந்துகொள்வதிலே கருத்தூன்றியிருந்தனராதலால் பெரியாரிருப்பிடஞ்சென்று அவருக்கு வேண்டிய பணிவிடைசெய்து அர்த்தவிசேஷங்களை யறிந்து வந்தனர். தாமத்தில் ஊக்கங்குன்றியிருக்கிற இக்காலத்தில் அவ்வாறு பெரியார்பாற் சென்று உண்மையறிந்துகொள்வதென்பது பெரிது மரியகாரியமாகும். பெரும்பகுதியினர் இம்மைப்பயன் ஒன்றையே நாடி அல்லும் பகலையும் வீணாகப்போக்குகின்றனர். உண்மை யறிந்து உய்வடையக் கருதிய சிலர், பெரியார்பாற் சென்று விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்குச் சக்தியற்றவர்களாயிருக்கின்றனர். இத்தன்மையினர்க்கும், அரிய விஷயங்களை யறிந்துகொள்வதில் ஆர்வமுடைய மாணாக்கர்கட்கும் இதுபோன்ற பத்திரிகைகள் பெரிதும் பயனளிக்கற்பாலன.

நம் சென்னை இராஜதானிக்குள் நம் ஸம்பிரதாயப் பத்திரிகைகள் பல தோன்றி மறைந்தன. இங்ஙனமறைந்தமைக்கும் போற்றுவாரின் குறைவென்றே துணிந்து சொல்லலாம். இக்குறைபாடு, அறிவுடையாரின் உள்ளத்தைப் பெரிதும் வருத்துமன்றே! தற்பொழுது நம் திவாகர மொன்றுதான் அறிஞர்களின் கட்டுரைகளாகிய கிரணங்களைக்கொண்டு ஸம்ப்ரதாயாம்சங்களைப் பிரகாசிப்பித்துக்கொண்டு வருகிறதென்னும்படியாய் விட்டது. இதனால் நமது சமயம எவ்வளவு அருகிக்கொண்டு வருகிறதென்று ஊகிக்கலாம்.

இந்த நிலைமையில் திவாகரத்தைப் பெரிதும் அபிமானித்து வந்தவர்கள், சென்ற இரண்டாண்டுகளாகச் சிறிது அபிமானம் குன்றியவர்களாகக் காணப்படுகிறார்கள். ஓராண்டு வரை பத்திரிகையைப் பெற்றுக்கொணடு சந்தாத் தொகை யனுப்பாதிருப்பவர்களும், இரண்டாண்டுகளாகப் பெற்றுக்கொண்டு வி. பி. யைத் திருப்பிவிடுவார்களும், 'பத்திரிகையைப் பெற்றுக்கொள்வதற்குத்தான் கடமைப்பட்டிருக்கிறோம்' என்று உதாசீனமாயிருப்பார்களுமாய் விளங்குகின்றார்கள். இவர்களனைவரும் ஸம்பிரதாயத்திற் பெரிதும் ஈடுபட்டவர்களே. தர்மங்களை விர்த்தி செய்வதிலும், பிறருக்கு நஷ்ட முண்டுபண்ணலாகாதென்பதிலும் கருத்துடையவர்களே. இங்ஙனமிருந்தும் நம் திவாகர விஷயத்தில மாத்திரம் இவர்கள் நஷ்டத்தை யுண்டுபண்ணுவது வியப்பே. அச்சுக்கூலியும், காகிதச் செலவும் தபாற்செலவும் எவ்வளவாகுமென்று அவர்கள் கருதும்படி அந்தராத்மாவாயுள்ள இறைவனும் உணர்ச்சியையுண்டுபண்ணாதிருக்கின்றானே. இதற்கெனனென்பேம். இப்பத்திரிகையின் ஊதியத்திலிருந்து சிறநத ஸமபிரதாய விர்த்தியான காரியத்தைச்செய்ய வேண்டுமென்று ஊக்கங்கொண்டிருந்த எங்கட்கு அபிமானிகள் இவ்வாறு செய்வரேல் யாங்கள் என்செய்வோம். பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விருப்பமிலலாதவர்கள், தொடக்கபபத்திரிகை பெற்றுக்கொண்டவுடன் வேண்டாம் என்று தெரிவித்துவிடுவரேல் அவர்கள்பால் பெரிதும் நன்றி பாராட்டுவோம்.

இதுவரை நம் திவாகரத்தில் அறிஞர்களின் கட்டுரைகள் பல வெளிப்பட்டுள்ளன. அவற்றான் ஐயத்தினீங்கித் தெளிவுற்றார்

பலருளர். இன்னும் இவைபோன்ற அரியவிஷயம் வெளியாவதற்கும், அறிந்துகொள்வதற்கும் இப்பத்திரிகை பெரிதும் சாதனமாயிருப்பதால், இது எப்பொழுதும நிலைபெற்றிருக்கவேண்டுமென்பதில் யாவருக்கும் உளமகிழ்ச்சியிருக்குமென்றே நம்புகிறோம்.

மனமுடைய தனவான்கள் ஒருவர் இருவர் சேர்ந்தேனும் இப்பத்திரிகையைப் பொறுப்பா யேற்றுக்கொண்டு நடத்த முன்வரலாம். இன்றேல், பல தார்மிகர்கள் கூடி இயன்ற பொருளுதவி செய்து நடத்துவதற்கு முன்வரலாம். ஒருவகையாலும் நடத்துவதற்கியலாத ஒரு பெரிய காரியமில்லை. இது விர்த்தியாவதற்கு ஆஸ்திகர்களாயுள்ளவர்கட்கு மனமொன்றே வேண்டுவது.

பெரியோர்களே! இனி எங்கட்கு மனவெழுச்சியை யுண்டு பண்ண உங்கட்குத் திருவுள்ளமிருக்குமானல் பல ஸ்ரீமார்களைப் பொருளுதவி செய்யும்படி தூண்டியும், சந்தாதார்களாகச் சேர்த்தும், சந்தாத் தொகை யனுப்பியும் உபகரிப்பீர்களாக. இவ்வாறு உதவிபுரியுமாறு பன்முறை வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

நம்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவச் சிறப்பு.

[6-ம் திருநாள்—உறையூர் வைபவம்].

ஆனந்தமயமான தெளிவிசும்பாகிய திருநாட்டில் அபராகருத தேஜோரூபமாய்த்திகழும் அழகியமாமணிமண்டபத்து, தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்யினும், அங்குள்ள சீர்மைக்கும் இங்குள்ள சீர்மைக்கும் உள்ள நெடுவாசியை யறிந்த அமராகோன் "பாரகத்தின் சீர்மை பகரவொண்ணுது" என்பது தோற்ற அன்னையாயத்தனுய் அனைவரையும் ஆண்டிடுவேதன் பொருட்டு அணியரங்கத்தே வந்து படகொடுகிடக்கில், அவனைவிட்டு அரைக்கணம் பிரியினும் தரித்தலரிது என்பது தோற்ற "அகலகில்

லேன், அகலகில்லேன்'' என்றெக்காலமும் அலற்றிக்கொண்டு அவன் மார்பில் கிடக்கும் அலர்மேல்மங்கையும் அவனியில் அவதரியாதொழிவது அஸங்கதமன்றோ!

யதா ஸமுத்ரமதோ விஷ்ணோ: தவெதவெயம் ஹிஜோ த்தி।
ராவவத்வெ ஹவத்஼ீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி।
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷா நபாயிநீ॥

என்னும் ஸ்ரீ விஷ்ணுபுராண சுலோகத்தை ஈண்டுக் கவனிக்கில் இதினுண்மை நன்கு விளங்கும். அவன் இராமகுலதிலகனாயவதரித்தனனாகில், இவள் ஜானகியாயவதரிப்பள்; அவன் கிருஷ்ணனானால், இவள் ருக்மிணி யாவள்; அவன் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தமாக இன்னும் எங்ஙின்ற யோநியுமாய்ப் பிறக்கினும், இவளும், அவ்வவ்வமயங்களுக்கிணங்க அவன் விரும்பும் வடிவுடனமைவள். இதிங்ஙனமிருக்க, அவன் அரங்கநகரப்பனாயமைய இவளும் அவனுக்குக்கும் ஆருயிரணங்காய் அவதரித்து, அவனை யணுகாவிடில் "நஜீவேயம் க்ஷணமபி" என்றிருக்கும் அவன் படியும் தரிக்க வொர்த்யமாயன்றோ இருக்கும். தவிர, "அநந்யாராகவேணாஹம்" என்றும், "அநந்யாஹி மயாஸீதா" என்று மிலங்கும் இருவர் வார்த்தைகளும் கவனிக்கற்பாலன. மற்றும், "பின்னை தோள் மணந்த பேராயா" என்னும் நம்மாழ்வார்போலே, நமக்கும் ஓர் மிதுனத்தின் சேர்த்தி உத்தேச்யமன்றோ? "பர்த்தாவினுடைய படுக்கையையும், ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதேயிருக்கும் மாதாவைப்போலே" அவளும் இருப்பது யாவரும் உணரத்தக்கது. புருஷகாரபூதையான பிராட்டி அருகேயில்லாவிடில் தாயற்ற சேய்களாய் நாம் ஆவதில் யாது ஐயம்?

"ராஜ்ஞீ஼ீதாநேவா ராஜ்யம் வாநராவாத்வாநு।
வ்யாஹ்ருஷ்டேந்ததோ லோகா:॥"

என்று மாதாபிதாக்கள் இருவரும் சேரவிருந்து பரியப்புக்காலன்றோ ப்ரஜைகளுக்கொரு குறையும் வாராதொழிவது. தவிர அவனும் அழகிய "மணவாளனு" யிருக்கிடக்கில் அவனுக்குத்தக்க

மணுட்டியொருத்தி வேண்டாவோ? ஆகவே பூவின்மிசை நங்கையும் புவியிலவதரித்தனள்.

எம்பெருமானின் ஸௌகுமார்யத்திற்காட்டில் பிராட்டியினது ஸௌகுமார்யம் மிகவும் சிறந்ததென்று பரம ரஸிகர்களாகிய நம் பூர்வாசார்யர்களால் போற்றப்படுவது உண்மையேயாகில், அவளுடைய ஒப்பற்ற ஸௌகுமார்யத்திற்குத்தக்க இடத்திலேயே அவளும் அவதரிப்பதுதான் பொருந்தும். "திருமார்பன்" என்னும் பதவ்யாக்யானத்தில் "திருப்பாற்கடலிலே நீருறுத்தாதபடி திருவனந்தாழ்வானைப் படுக்கையாகக்கொண்டு, அதிலே நாகாவர்ணமாயிருப்பதொரு மேல்விரியை விரித்தாப்போலே அவன் சாய்ந்தருள, மேல் எழுந்தருளியிருக்குமாயிற்றுப் பிராட்டி" என்னும் ஈட்டியுள்ள வாக்யம் எவ்வளவு இன்பகரமாக இருந்துளது. ஆகவே மலர்மகளும் தன்னுடைய அங்குற்றைச் செவ்விக்கொரு குறைவும் வாராதே இங்கும் அவதரித்தனள். இங்கும் பூமியுறுத்தாதபடி ஓர் தடாகத்திலுமாய், "தாமரைபோல் திருமார்வு கால் கண் கை செவ்வாயுந்தியானே" என்கிறபடி எம்பெருமானுடைய ஸகல அவயவங்களுக்கும் ஸாம்யம் சொல்லத்தக்கதான ஓர் தடத்தாமரை மலரிலுமாய், ஒரு சிறு பெண் குழவியாய் ஜனித்தனள். அவதரித்த ஊரும், நீர்வாய்ப்பு, நிழல்வாய்ப்பு முதலானவை போகத்துக்கு வேண்டிய வெல்லா இயற்கை அமைப்புக்களையும் உடையன. கங்கையிற் புனிதமாய வண்டுகளித்திரைக்கும் பொழிலசூழ் வருபுனல் பொன்னிக்குத்தென்பால் அருகேயுள்ளதும், தென்னரங்கத்தின்னமுதனது திவ்யகடாக்ஷம் என்றும் நீங்காது தன் திக்கிலேயே நிறையப்பெற்றதும், கிட்டுதற்குமரிய பெரியபெருமாளது திருமேனியைத் தீண்டப்பெற்ற ஸ்ரீ பாணர் வந்தவதரிக்கப்பெற்றதும், அரங்கனடிபணிந்துய்ந்த அனேக சோழமன்னர்களால் ஆண்டு வரப்பட்டதும், சோழநாட்டிற்கெல்லாம் தலைநகராக உள்ளதுமான "நிசுளாபுரி" என்ற ஓர் நகருண்டு. இதனை உறையூரென்ற பெயராலும் வழங்குவர். இந்தத் திவ்யநகரமே, 'பிராட்டி அனைத்துக் கல்யாணகுணங்களுடன் அரங்கனுக்கின்பம் பயக்க ஸாந்நித்யம் செய்யுமிடம்' என்னும் பொருளுக்கிணங்க "உறையூர்" என்னும்

பெயரும் அமைந்தது ; ஆச்சர்யமே! "பிராட்டி உறையுமூர்" என்பது நாமைகதேச நாமக்ரஹணம் என்ற நியாயத்தால் "உறையூர்" என்று வழங்கப்பெறும்.

நிசுளாபுரியில் நெடுநாள் மகவுப்பேறில்லாததினுல் திருவரங்கநாதனை உபாஸித்தும் பலமடையாதொழிய நிரம்பவும் நொந்து ஆண்டுவந்தனன் நந்தசோழன் என்னும் அரசன். பெரியபெருமாளே தனக்கு மருமகனுக வரவிருக்கின்றனன் என்பதை அவ்வமயமே அறிவது அவனுக்கு அஸாத்தியமன்றோ? அவனும் ஒருநாள் தற்செயலாக தனது உத்யானவனத்தில் உலாவச்சென்றபொழுது, தாமரையோடையில் குழந்தையின் குயிலினுமினிய குரலோசையைக்கேட்டு ஆங்குச்சென்று பார்க்க, தேஜோரூபமாய் தன்னழகுக்கொப்பில்லாது கமலமலரிற் கிடக்கும் குழந்தையைக் கண்டானந்தித்து ப்ரமித்து நின்றனன். பின்னர், 'இது எம்பெருமான் நமக்களித்த நற்செல்வ' மெனக்கருதி, குழந்தையை வெகு ஜாக்ரதையாக அரண்மனைக்குக்கொண்டு சென்று மிகவும் போற்றிவளர்த்து வந்தனன். கமலத்தில் கண்டெடுத்ததற்கிணங்க "கமலவல்லி" என்று திருநாமமிட்டனன்.

கமலவல்லியும் சுக்லபக்ஷத்துச் சந்திரனைப்போல் நாளுக்குநாள் தன் செவ்விக்கொரு குறைவும் வாராதே வ்ருத்திபடைந்து, மணத்திற்குத்தக்க பருவமடையவே,

வபுஶ்ஶீலம்வயோ வ்ருத்தம் வயோ த்ருஷ்டாவ ஜே விதா ।
வ்ருஷாணூவமதகஃ வாஸம் நாவஸ்வாஜா ஜஷுவொ யயா ॥

என்கிறபடி ஓர் தக்க கொள்கொம்பிலே சேர்க்கவேண்டுவதுபற்றி நந்தசோழன் க்லேசிக்கத் துடங்கினன். எங்குமுளனை கண்ணனென்னும் அரங்கமால் ஸமீபத்திலேயே யிருக்க இவனிக்கனம் வருந்துவதெதற்கு? கொடியைப்பற்றத்தானே ப்ரயத்னம் செய்யும் ஸ்வபாவனல்லனே அவன்? தானே மிதிலையளவும் சென்று, வில்லிறுத்து மெல்லியலாகிய மைதிலியை மணந்தனன். தானே சென்றே, சிசுபாலன் தேசழிய, உருக்குமி ஒளியழிய, மற்றவர்கள் மனம் திகைக்க, உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டுவந்து

கைப்பிடித்தது. மற்றும் பரமபதத்தில் நித்யஸூரிகள் தனக்குத் திருமஞ்சனம் செய்துவைத்துத் தூபம் காட்ட, அத்தூபப்புகையிலேயே தன்னைத்தன் மாயையினால் மறைத்தது, பூவுலகில் கண்ணனாய் அவதரித்தது, நப்பின்னைப்பிராட்டியை யடைவதற்கே யன்றோ. "மின்னிடை மடவார்" என்னும் திருவாய்மொழியில் பராங்குச நாயகி தன் தோழிகளுடன் கூடியிருக்கும்பொழுது கண்ணன்வந்து அவர்கள் கழகத்திற் (சங்கத்தில்) புக எண்ணிலா ப்ரயத்னங்கள் செய்யும்பொழுது "போகு நம்பி" என்றும், "கழகமேறேல் நம்பி" என்றும், "ஒரு நான்று தடிபிணக்கே" என்றும் வெகு இழிவாக அவனைப்பேசினார்கள். ஆனால் அவன் அவ்வாயர்குலத்தை வீடுய்யச் செய்யவேண்டுமென்ற ஏக சிந்தையுடன், அவர்களது இழிவான பேச்சுக்களையும் கணிசிக்காது மீண்டும் அவர்கள் கழகத்திற் புக்குத் தன் முகவொளிதிகழ முறுவலசெய்து நின்றனனே. எம்பெருமானின் சீர்மை இவ்வண்ணமிருக்க, நந்தசோழன் பேரக்லேசிப்பானேன்? என்னில், அவனும் இப்ரக்ருதி ஸம்பந்தமுள்ள ஓர் சேதனனே யாகையாலும், இதர உலகங்களில் வாழும் நான்முகன், செஞ்சடையான் என்றிவர்களும் பரந்தாமனது மாயையை அறியவொண்ணாதாகையாலும், அவன் தன் பெண்ணிற்காக வருந்துவது புதுமையாகுமோ? ஆயினும் ஓர் வழியில் அவன் ஒப்பற்ற புத்திசாலியா யிலங்கினன். தன் பெண்ணை மணக்கவரும் மணமகனுக்கு "வில்லிறுப்பது", "ஏறடர்ப்பது", "வசிநாட்டுவது" முதலிய எவ்வித க்ரூரமான நிபந்தனைகளும் வைக்காதொழிந்தனன்.

"ஸர்வேசுவரன் நினைவறிவான்" என்னும் வாக்யம் பொய்யாகத் தக்கதன்று. திருவனந்தாழ்வான்மீது வெகு போக்யமாய்ச் சாய்ந்தருளினாலும், திருவரங்கேசன் கண்ணுறக்கம் கொண்டனனன்று. நந்தசோழனையும் அவன் மகளையும் ஆட்கொண்ட பின்னரல்லது அவனுக்கு உறங்கவிரகில்லை. மற்றும் "மதனசெங்கோல் நடாவிய கூற்றமன்றே" கமலவல்லி. மீளவியலாத விக்கூற்றத்திற்குத் தப்பினனேனும், நந்தசோழனது ஒப்பற்ற எண்ணமாகிய வலையிற் சிக்காது எங்குச்செல்வது? தனக்கு இதுவரை கிடைத்த மாமனார்களைப் போலல்லாது, தன் ஸௌகுமார்யத்தில் ஈடேழ்

ஒருவன் தனக்கு மாமனாக வரவிருப்பது, அவனுக்கிடைத்தற்கரியதே! சோழன் 'நமது மகள் அயோநிஜையாய் ஜநித்து அப்ராக்ருத தேஜஸ்ஸுடன் அத்விதீயமாய் விளங்குகிறாள்; இவள் பிராட்டியே யாகவேண்டும்; இவளை மணக்க எம்பெருமானேதான் வரவேண்டும்' என்று நந்தசோழன் ஒருவாறு தேறினன். இனி, நம் மந்தபுத்தியால பெருமாளது ஆண்மையில் ஸம்சயித்து, அவனுடைய ஸௌகுமார்யத்தைக் கணிசியாது ஸ்ரீ ஜநகனைப்போலவும், நப்பின்னையினது தகப்பன்போலவும், வில்லிறுப்பது, எறடர்ப்பது முதலான கடூர நிபந்தனைகளுக்கு அவனை உள்ளாக்குவது பொருத்தமன்று. அவன் வந்தால் 'அவனைக்கண்டு, நடுவே எருதை நிறுத்தாதே, கடுக நீர்வார்த்துக்கொடுப்பதுதான் ஶ்லாக்யம்'' என்று நந்தசோழன் கருதினனாகில், இதை எம்பெருமான் எங்ஙனம் மறக்கவியலும்? தன்னை நிபந்தனைகளுக்குள்ளாக்கி, 'கல்நெஞ்சர்கள்' என்று இழிபெயர்பெற்ற தன் இதர மாமனார்களுக்கே அவன் அருளியிருக்க, பரம வைணவ சித்தத்தையுடைய நந்தசோழனையோ அவன் புறக்கணிப்பது!

கமலவல்லியின் வடிவழகு ஒருங்கேயிழுக்க, நந்தசோழனது பரிமாற்றம் மீண்டும் வலிவுடனிழுக்க, "ஊராயெ நமஃ" என்று பட்டர் புகழும்படியான த்வரையுடன் நினறனன் திருவரங்கச் செல்வன். அனனவனுக்குப்பெரியதிருவடி, ஆனி, ஹம்ஸம் முதலான அனேக வாகனங்கள் இருந்தும், குதிரைநம்பிரான் பேரில அவன் ஆரோகணித்தால இச்சேவை மற்றைய வாகனங்களிலுள்ள ஸேவைகளில் அநேக மடங்கு விஞ்சிக்கிடக்கின்றது. வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல செலுத்தும் செங்கோலுடைய திருவரங்காஜராயன்றோ அவனிருப்பது. திருவரங்காஜனானல், ராஜசின்னமான குதிரைநம்பிரானையொழிய மற்றைய வாகனஙகள் எவ்விதம் அவனுக்கு நிரம்பவும் பொருத்தமாக வமையும்? தனக்கு இங்ஙனம் அஸாதாரணமாகப் பொருந்தியுள்ள குதிரைநம்பிரான்மீது அரங்கன் ஆரோகணித்து வேட்டையாடி வருவதுபோற்சென்று, உத்தியானவனத்திற் கமலவல்லி மலர் கொய்துகொண்டிருக்கும் ஸமயம்

விப்வாவதாரமாய் அங்குச் சென்று அவளுக்கு ஸேவை தந்து மறைந்தனன்.

எம்பெருமான் தன் வடிவழகுவெள்ளத்தை அவளுக்கு மின் போல் காட்டிமறைத்தனனாதலால், "அவளும் மாற்பால் மனம் சுழித்து", காலாழ்ந்து, நெஞ்சழித்து, கண் சுழன்று மோஹித்தனள். பாங்கிகளும் இவளை அரசனிடம் பரிந்துகொண்டு புக, அவன் பெண்ணிற்குத் திடீரெனவந்த நோய் இன்னதென்றறியாது கலங்கினன். கமலவல்லியும் மோஹம் தெளிந்தவுடன் நெஞ்சுருகிக் கண்பனிப்ப நின்று, அஞ்சிறைய புட்கொடியையே ஆடிப்பாடி, "நஞ்சரவில் துயிலமர்ந்தநம்பீ" என்றும், "அணியரங்கமாடுதுமோ தோழீ" என்றும், "எம்பெருமான் திருவரங்கம் எங்கே" என்றும், "வந்தானோ திருவரங்கன், வாரானோ" என்றும், "தாதாடு வனமாலை தாரானோ?" என்றும் கலங்கிப் பிதற்றினள். அரசன் "குழந்தாய்! இஃதென்?" என்று வினவ,

"ஒருகையில்சங்கொருகைமற்றாழியேந்தி
உலகுண்டபெருவாயரிங்கேவந்தென்
பொருகயல்கண்ணீரரும்பப்புலவிதந்து
புனலரங்கமூரென்றுபோயினாரே"

என்று விடைபகர்ந்து துடித்தனள். பின்னர், தாய் வாயிற் சொற் கேளாள்; தன்னாயத்தோடணையாள்; பூண்முலைமேல் சாந்தணியாள்; பொருகயற்கண்மையெழுதாள்; பூவை பேணாள்; பேராளன் பேரல்லபேசாள். இதைக்கண்ட சோழன் "என் செய்வது" என்று மகளைக்கேட்க, அவளும் "மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்" குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில் எழில் கமலப்பூவழகர் என்று ஸர்வாங்கஸுந்தரனாய், எம்மானாய் விளங்கும் திருவரங்கநாதனுக்கே அடியாளைக் கன்னாலம் செய்து வைப்பீர்" என்று ப்ரார்த்தித்தனள். அவனும் "வளர்த்ததனால் பயன்பெற்றேன்" என்று ஹ்ருஷ்டனாய் (மகிழ்ச்சியுடையனாய்) அங்ஙனமே செய்வதாக விசைந்தனன்.

பிறகு நந்தசோழன் திருவரங்கத்தளவும் சென்று திருவரங்க ராஜரிடத்தில் தன் மகளது எண்ணத்தை விண்ணப்பிக்க, பார்தாம

னும் "ராஜன்! நின்மகளை ஸகலருமறிய நாமே வந்து கைபிடிப்போம்; கவலைகொள்ளேல்" என விசைந்தனன். நாளைவதுனவை மணமென்று நாளிடப்பட்டது. 'பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ், இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் வந்திருந்து மகட்பேசி மந்திரிக்க', 'நாற்றிசைத்தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி பார்ப்பனசிட்டர்கள் பல்லாரெடுத்தேத்த', 'கதிரொளி தீபம் கலசமுடனேந்தி சதிரிளமங்கையர் தாம்வந்தெதிர்கொள்ள', 'மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத', 'வாய்நல்லார் நல்ல மறையோத', மைத்துனன்நம்பி மதுசூதனனிய திருவரங்கன் வந்து கமலவல்லியைக் கைப்பற்ற, பாந்தாமனின் அடியார்கள் பல்லாண்டு செப்ப, கோயில் பரிகாரங்களனைத்தும் ஆனந்தக் கூத்தாட, மற்றுமுள்ள மாந்தர்கள் மகிழ்ச்சியுடன் போற்றத் திருக்கல்யாண மஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடந்தேறியது. *

சோழனும் கமலவல்லியைக் கார்முகில்வண்ணனுடன் கோயிலுக்கனுப்பும்பொழுது ஸ்த்ரீதனமாக "முந்நூற்றறுபதின் கலம் தங்க அமுதுபடியும், அதுக்குவேண்டிய கொம்பஞ்சு கொடிபஞ்சுக் கறியமுதும், அவைகளுக்கு வேண்டின சம்பாரங்களெல்லாம் தங்கத்தாலே பண்ணுவித்து, அவைகளையும் ஸ்த்ரீகளுக்கு ஸமங்களாக ‡ நூறு பரிசாரிகைகளையும்" கொடுத்தனுப்பி வைத்தனன். இவைகளைக்கண்டு அரங்கனின் திருவுள்ளம் திருப்திபடையாமை தெரிந்து கலங்கி, தனக்கும் தன் பெண்ணையொழிய வேறு சந்ததி இல்லாததாலும், தனது ஸர்வ ஸ்வத்தையும் அரங்கனடியிணையில் ஒப்புவித்து, அபராதக்ஷாபணம் செய்து, திருமாமணி மண்டபங்கள், திருமதில்கள், திருக்கோபுரங்கள், திருநந்தவனங்கள் முதலானவைகளும் கட்டுவித்து மருமகனை மகிழ்வித்தனன். கமலவல்லியும் தன் மணவாளனுடன் கோயிலேற வந்ததும் அத்ருச்யையாக

* இவ்விருத்தாந்தத்தைக் கோயிலொழுகிற் காணலாம்.

‡ இவர்களது ஸந்ததிகளே இப்பொழுது திருவரங்கம் கோயிலுக்கு ஸம்பந்தப்பட்ட தேவதாஸிகளென்பவர்கள். இக்காரணம் பற்றியே, இவர்களுக்கு "உறையூர் வல்லியார் கூட்டத்தார்" என்று அரங்கன் அருளப்பாடு ஸாதிக்கின்றனன்.

மறைந்துபோக, சோழன் உறையூரில் தன் குமாரத்தியையும், அவளைவசீகரித்தாட்கொண்ட அரங்கனையும் ப்ரதிஷ்டிப்பித்தனன்.

பின்னர் திருவரங்கராஜனை அடிபணிந்து "அப்பனே! அடியேனையும் ஒரு பொருளென மதித்து ஆட்கொண்டு, அடியேனது மகளையும் மணந்து, அடியேனை "தேவரீருக்கு மாமனார்" என்று அனைவரும் போற்றும்படி செய்ததென்னனம்! தேவரீரது இவ்வாச்சர்யச்செயலை அனைவரும் எக்காலத்திலும் அறிந்து, தேவரீரது கல்யாணகுணங்களில் அதிசங்கை பண்ணுகைக்கு நிவ்ருத்தியாக ஆண்டாண்டுதோறும் ஒருமுறை இங்கெழுந்தருளி அர்ச்சாவிக்ரஹமாகவிருக்கும் அடியேனது செல்வக்குமரியுடன் சேர்த்தியிலிருந்து அடியேனையும், மற்றுமுள்ளவர்களையும் மகிழ்வித்து மீண்டும் அரங்கமேற எழுந்தருளவேணும்" என்று இரந்தனன். பெருமாளும் அதற்கிசைந்து அன்றுதொட்டு இன்றுவரை அங்ஙனமே சென்று வருகின்றனன்.

"இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம்" என்கிறபடியே ஸௌசீல்யகுணத்தின் சீர்மையெல்லாம் எல்லையற அரங்கனன்றையன்றோ ப்ரகாசிக்கின்றன. பரமபதத்தில் இக்குணம் காணவியலாததால், இதை அநுபவிப்பதன் பொருட்டே பெரிய திருவநந்தாழ்வான் உடையவராக பூவுலகிலவதரித்து, ஆயுட்காலமத்தனையும் அரங்கனன்டையே கழித்தனர் போலும்! பரமரஸிகரன்றோ அவர். ஆதலே நம்பெருமாள் உறையூருக்கெழுந்தருளும் இவவைபவத்தை ஸௌசீல்யமே முற்றிலும் ப்ரகாசிக்கும் "பெரிய திருநாள்" எனக் கருதப்படும் "பங்குனிப் ப்ரம்மோத்ஸவத்தில்" ஆறுவது திருநாளில் சேர்த்தருளினர். கிழவியின் பொருட்டு ஜீயர்புரத்தேறச் செல்வதும், அபலையின் பொருட்டு நிசுளாபுரியளவும் செல்வதும் அரங்கனது ஸௌசீல்யத்தை எவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இச்சேர்த்திசேவையை இவ்வுத்ஸவத்தில் மட்டும் சேர்த்தருளியதற்கு மற்றோர் காரணமுமுண்டு. இது ஸத்யலோகத்தில் பிரமனால் அரங்கனுக்குச் செய்து வைக்கப்பட்ட உத்ஸவத்திற்கு ஞாபகார்த்தமாக இங்கு நடக்கின்றமையால், "ஆதி ப்ரம்மோத்ஸவம்" என்று பெயரிடப்பட்டது.

சதுர்வேதங்களையும் ஓதி, பரப்ரம்மத்தை ஒருவாறு உணர்ந்த திசைமுகன் "இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை" என்னும் சட்டத்திற்கு மாறாகப் பிராட்டியைத்தவிர்த்து பெருமாளுக்கு மட்டும் உத்ஸவம் செய்திருக்கமாட்டானாதலால், அதை ஸூசகமாக அறிந்த நமது உடையவர், அந்த ஞாபகார்த்தமாக இங்கு நடக்கும் திருநாளிலும் பிராட்டியுடன் கூடிய ஸேவையே நமக்கும் முறைதப்பாது கிடைப்பதன்பொருட்டு சேர்த்தருளினர் என்று கருதலாம்.

மற்றும் அரங்கன் தான் உறையூரளவும் செல்லாதொழிய முடியுமோ? தனக்குத்தகுந்த 'அழகிய' மணவாளன் இவனே எனக்கருதி மற்றெவ்விதப்பெயரும் அவனுடைய வடிவழகுக்குப் பொருந்தாது என்பது தோற்ற "அழகியமணவாளன்" என்றே பெயரிட்டனள். தன்னிகரொன்றில்லாததும், கேட்டவளவிலேயே மையல்விளைவிக்கும் புனிதமாயதுமான விப்பெயர்படைத்தது கமலவல்லியாவன்றோ! "அழகுக்கரும் ஒவ்வாத அழகியமணவாளப் பெருமாள்" என்று அரையர் போற்றுவதற்கிணங்கப் பெயர்படைத்த பெயர்ச்செருக்கும்; நடையிலே ரிஷபத்தினுடைய வீறினையும், மத்தகஜத்தினுடைய மதிப்பையும், புலியினுடைய சிலிட்கையும், ஸிம்மத்தினுடைய பராபவகத்தையும் பழித்துக்காட்டுவதுபோல் நடந்து தன்னிடத்தில் அவைகள் அந்தந்த ஸ்பாவநடைகளைக் கற்றுக்கொண்டு போம்படி நடக்கும் நடைச்செருக்கும்; ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலாவடிமைசெய்யும் திருவனந்தாழ்வானென்கிற திருவொண்கொற்றக்குடையை விலையில்லா மாணிக்கங்கள் பதித்த தங்க "திருமுத்துக்குடை" ரூபமாக எங்குச்செல்லினும் பிரியாது பிடித்துச்செல்லும் குடைச்செருக்கும்; குதிரை நம்பிரான் மீதிருந்து "நேர் வையாளி, கோணை வையாளி" முதலிய கதி விசேஷங்களைக் காட்டி "மதியாத தெய்வங்கள் மணவாளப் பெருமாள்" என்று ஏத்தப்படும் வீரச்செருக்கும்; எத்திவ்ய தேசத்திலும் காண்பதற்கரிதாம்படி அளவிடவியலாத ப்ராஸாத வகைகளையும், திருப்பணியாரவகைகளையும் அமுது செய்யும் போஜனச்செருக்கும்; "வஸவூ மநூ:" என்னும் தன் திருமேனிக்

கும் பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி முதலான வாஸனை த்ரவ்யங்களை எத்திவ்யதேசத்தைவிடவும் பன்மடங்கு மேலான அளவில் சேர்த்துக்கொண்டு "பரிமளரங்கன்" என்று பரிமளத்தைக் கொண்டு நிரூபிப்பதற்குரிய "வாஸனைச்சேருக்கும்"; "பெருக்க முள்ள பரிகரங்கள் தொழுதாட்செய்ய" என்பதற்கிணங்க அநேக ஏவலாட்களாகிய ஆட்படைச்சேருக்கும்; திருவீதி வலஞ்செய்தரு ளும்பொழுதிலும், எத்திவ்யதேசத்திலும் காணவரிதானபடி, திவட்டிப்பந்தம்முதற்கொண்டு புத்தருக்கு நெய்யைவிட்டெரிக்கும் செல்வச்சேருக்கும்; இன்னும் திருவரங்கேசனர் கொண்டருளிய மற்றெல்லாவிதச் செருக்குகளுக்கும் காரணம் கமலவல்லியே யன்றோ? கமலவல்லியினது ஸ்த்ரீதனமாக கணக்கற்ற செல்வத்தை யடையாவிடில் எங்ஙனம் அழகியமணவாளன் இவ்விதமான செருக்குகளை கொள்ளவியலும்? மாமனாது வீட்டில் ஏராள மான செல்வமிருந்து, பிள்ளையில்லாதபடியிருந்தால், மருமகன் புக்கு இஷ்டம்போல் செலவுசெய்து கர்வமடைவது உலக இயல்பே யாதலால், அழகியமணவாளனும், அதனை யனுஸரித்து இன்னும் எச்செருக்கை விரும்பினும் கொள்ளலாம்! ஆயர்கள் நெடுநாள் சேமித்துவைத்த வெண்ணெய்தனைக் களவில்உண்டு இஷ்டம்போல் இதரர்களுக்கும் விநியோகம்செய்து களிப்பதன்பொருட்டே பரம பதத்தையும் விட்டு க்ருஷ்ணனுயவதரித்து அசோதை யிளஞ்சிங்க மாய்க் கர்வமடைந்து திரிந்ததுபோல, திருவரங்கனுதனும் சோழன் நெடுநாள்திரட்டிவைத்த செல்வமனைத்தையும் ஸ்த்ரீதனம் என்னும் மாயத்தினுற் பெற்று இஷ்ட விநியோகம் செய்து, செருக்குடன் வாழ்வதன் பொருட்டே பரமபதத்தையும், ஸத்யலோகத்தையும், அயோத்தியையும் விட்டு ஓடோடியும் வந்து அரங்கம் புக்கனன் போலும்!

"உறையூர்வல்லி உபயமுலைக்கலவிக்கினிய பெருமாள்; என் கண்ணுக்கினிய பெருமாளே" என்று திருவரங்கன் கூட்டத்தார், திருவத்யயனேத்ஸவத்தில் பெருமாளுக்கு இராப்பத்தில் தினந்தோறும் கர்ப்பக்ரஹத்திலிருந்து புறப்பாடு ஆனது தொடங்கி, போற்றிக் கொண்டே முன்செல்வர்கள். இதிலிருந்து கமலவல்லியின் பேரைக்

துக்குறுப்பான பின்னரே, அழகியமணவாளனும் அனைவருடைய கண்களுக்கும் இனியனாயிருக்கின்றனன் என்று புலனாகின்றது.

ஆக உறையூர்வல்லிக்கு எல்லாவிதத்திலும் பவ்யனாகிவிட்டனன் அழகியமணவாளன். இனி அவள் மூலமாக அவனிடம் நமக்கு எப்புருஷார்த்தத்தைத்தான் பெறவியலாது. "ஸர்வக்ஞன்" என்னும் பரமபதநாதன் நமது புண்யபாபங்களைக் கணிசித்து, நமக்கு விண்ணுலகம் தாராதிருப்பது எங்ஙனம்? "இவன் நல்லவன், இவன் கொடியன்" என்று விவேகிக்கும் பருவமல்லாத "ஆயர்குலத்து ஈற்றிளம்பிள்ளையாய்ப்புக்க அவன் நமக்கு ஏத்தரும் வைகுந்தத்தை அருளுமன்றே" என்று ஆறியிருந்தனர் ஸ்ரீ நம்மாழ்வார். அதுபோல கமலவல்லியும், அழகியமணவாளனும் ஏகாஸநத்திலிருந்து, "கமலேக்ஷணா" என்னும் அவள் கண்ணழகில் "கயலோ, கண்ணோ" என்று அவன் ஈடுபட்டுப் பிச்சேறியிருக்க; "மன்மதனும் மடவாராக ஆதரம் செய்யும்படியான அவன் வடிவழகிலே அவள் ஈடுபட்டுச் சுருண்டு துவண்டு உன்மத்தையாக; இப்படி இருவர்களும் 'உன்மத்தர்களாக இருக்குஞ்சமயம் நமது

* உலகத்திற் காதலன், காதலி என்பவர் ஒருவருக்கொருவர் மையலுற்றிருப்பதுபோல, கர்மத்தொடர்பு சிறிதுமில்லாத இறைவனும், இறைவியும் போகேச்சையால் மயங்குகின்றனரென்பது எங்ஙனம் பொருந்தும்? என்று ஐயமுண்டாகலாம். அதற்குச் சமாதானம் வருமாறு.— இறைவன் யாவராலும் தடுத்தற்கியலாத ஸ்வாதந்தர்யத்தையுடையவன். இவனுக்கு இந்த ஸ்வாதந்தர்யகுணம் தலையெடுத்தகாலத்தில் சேதனர்கள் செய்த குற்றத்தைக்கண்டு பொறாது வெறுத்து, அவர்களைத் நீக்கநியிற்றன்ளுவான். பெரியபிராட்டியார் எமபெருமான்பாற் கொண்டுள்ள மிகுந்த பக்தியைக் கண்டு அவனீடுபட, அதனைக்கண்ட பிராட்டியார், 'நாமசெய்த அன்பிற்கு இங்ஙனம் ஈடுபடுகின்றனனே; அவன்றன் னின்னருள் என்னே' என்று வியப்புற்றிருப்பார். இங்ஙன மிருவருமிருக்கின்ற சமயத்தில், சேதனர் செய்த குற்றம் இறைவன் கண்ணிற்குப் புலப்படாதொழியும். அப்பொழுது சேதனர் அவனால் அங்கீகரிக்கப்படுவோர்கள். இதனை, உலக திருஷ்டாந்தத்தால் இங்கு எடுத்துக்காட்டியதேயன்றி வேறில்லை. உலகத்தில் போகத்தில் விருப்புடையவர்களாய் மயங்குவதுபோல இறைவனும், இறைவியும் மையலுற்ற மனத்தினராய் மயங்குகின்றனரென்பதில்லை. அவன் இருவினைத் தொடர்பால் வருகின்ற காமாதிதோஷங்களற்றவனென்பது மறைமுடிபன்றோ! உலகினர்க்கு ஸ்தூலமாக நெஞ்சிற் படிவதற்காக, உலக நிகழ்ச்சியைப்போல எடுத்துக்காட்டுவதுண்டு. இவ்வாறு காணப்படுகிற விடங்கட்கு வேறு அந்தரங்கப்பொருளுண்டென்று அறிந்துகொள்ளத்தக்கது.

ஞானஜ்ஞானங்களேயும், புண்ய பாபங்களேயும் இவர்களுக்கு எங்ஙனம் அறிய ஸாத்யம்? இப்பிச்சேற்றம் இருவருமான சேர்த்தியில் மட்டும்தான் இருப்பதாக நினைபபது தவறு. மற்றைநாட்களில், அவள் உறையூரிலிருந்து, திருவரங்கன் இருக்கும் திக்காகிய வடக்கு முகமாகவே தனது வீக்ஷிண்யத்தை செலுத்திக்கொண்டிருப்பதும், அவனும் அரங்கத்திலிருந்துகொண்டே அவள் இருக்கும் திக்காகிய தெற்கேயே நோக்கிக்கொண்டிருப்பதும், அவர்களுடைய பிச்சேற்றத்திற்கு நிச்சயமான ஸூசகமே. ஆழ்வாரது பேற்றுக்கு விவேகிக்கும் பருவமற்ற சுற்றிளம்பிள்ளையா யமைந்தது. போல், நமது பேற்றுக்கும் விவேகிக்கும்சக்தியற்ற உன் மத்தர்களாகிய இவர்களுடையசேர்த்தி அமைந்தது ஆச்சர்யமே! மற்றும் கமலவல்லியின் புருஷகாரமென்றால் திருவரங்கன்தான் மறுக்கவொண்ணுமோ! ஆகவே பேற்றிலிச்சையுடையோர் அனைவரும் கமலவல்லியின் கடாக்ஷத்திற்கிலக்காவார்களாக.

S. RAMASWAMI IYENGAR, B. A.
462, East Chitra Street,
SRIRANGAM.

ஸ்ரீ:

மதிப்புரை.

குலாலமித்திரன் :—இஃதோர் மாதத் தமிழ்ப்பத்திரிகை. இக்காலத்தில் சமயமுன்னேற்றம், ஜாதி முன்னேறறம, தேச முன்னேற்றம் முதலியவற்றிற் கருத்துடையவராயிருந்து பலர் உழைத்து வருகின்றனர். அம்முறையில் இப்பத்திரிகை குலாலஜாதி முன்னேற்றத்திற்காகத் தோன்றியது. “ தென்னிந்திய குலாலர் சங்க”த்தின் ஆதரவில வெளிவருகின்றதனல், இது நீண்டகாலம் நிலைபெற்று விளங்கும் என்று ஊகிப்பதற்கு இடமுண்டு. மகா-ள-ள-ஸ்ரீ மு. பெரி. வீர. அழகர்சாமி வேளார் என்பவரே இதன் ஆசிரியராவர். இவர் இக்காலத்திற்கேற்றவாறு பயில்பவருக்கு நயம்பெறு

பல கட்டுரைகளை இதிற் சேமித்து வைக்கின்றனர். இதில் குலால வருண முன்னேற்றத்திற்குரிய பகுதிகளும், இலக்கியப் பகுதிகளும், நகைச்சுவைப்பகுதிகளும், பொது விஷயங்களும் நிறைந்துள்ளன. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

வருடச் சந்தா ரூ. 1—4—0.

விலாசம் :—

ஆசிரியர்.
" குலாலமித்திரன் " காரியாலயம்,
பழனி.

ஸ்ரீ:

நன்கொடை.

நமது திவாகர விஷயத்திற் பேரன்பு பாராட்டி, ஸம்ரக்ஷகராகவும், போஷகராகவும், ஜீவித சந்தாதார்களாகவும் சேர்ந்து பொருளுதவி செய்தார் சிலருளர். அம்முறையில இப்பொழுது தொட்டியம் திருநாராயணபுரம் ஸ்ரீமாந் பிள்ளையுறங்காவில்லி ராமாநுஜதாஸரவர்களும், வளவனூர் வைஸ்சேர்மன் ஸ்ரீமாந் மாணிக்கம் பிள்ளையவர்களும், புராண சிவகப்பாளையம் ஸ்ரீமாந் ந. லக்ஷ்மண சாமிப்பிள்ளை & ஸ்ரீமாந் இராமு ரெட்டியாரவர்களும் ஜீவிதசந்தாதார்களாகச்சேர்ந்து ஒவ்வொருவரும் இருபத்தைந்து ரூபா நன்கொடை செய்துள்ளார்கள். இவர்கள் " பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல, திருந்திய ஞானமும செல்வமும் " பெற்று இறைவன்றன் இன்னருளிற்குப் பாத்திராய்த்திகழுமாறு அவன்றன் இணையடிகளை இறைஞ்சுகின்றனம். இன்னும் பல தார்மிகர்கள் இவர்களைப்போலப் பொருளுதவிபுரிய வேண்டுகின்றோம்.

ப. அ.